Registered as a News Paper    பக்கங்கள் 04    விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆடி 05    20-07-1992    திங்கட்கிழமை    ஓசை 153

## செங்கண்மாரி நோய் பரவும் அபாயம்

(நமது நிருபர்)

ஈரல்வீக்க நோயான செங்கண்மாரியைக் கட்டுப்படுத்துவதற்கும் தடுப்பதற்கும் அதிகாரிகள் விரைவாக நடவடிக்கை எடுக்காவிடில் இலங்கை முழுவதிலும் இந்நோய் பரவலாம் என இலங்கை வைத்தியர் சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது மேற்படி சங்கத்தின் எயிட்ஸ் நோய் நிபுணர் கமிட்டித் தலைவரான பேராசிரியர் ஏ. எச. செரீப்டீன் பத்திரிகையாளர் மாநாடொன்றில் இந்த எச்சரிக்கையை விடுத்தார். மூன்று வகையான செங்கண்மாரி தொற்றுநோய்களில் செங்கண்மாரி 'வி' தொற்றுநோய் மிகவும் அபாயகரமானதாகும். இது ஈரலைப் பாதிக்கும். இதனால் உயிரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்த செலவால் பாரிய நிதி நெருக்கடி

# உலக வங்கியிடம் அரசு மன்றாட்டம்

## 400 கோடி அவசர உதவி தேவையாம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் இடம்பெற்றுவரும் யுத்தத்தின்காரணமாக சிறிலங்கா அரசிற்குப் பாரிய நிதி நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்க 400 கோடி ரூபா உடனடியாகத் தேவைப்படுவதாகவும், அதைப் பெற்றுக்கொள்ள உலக வங்கியைச் சிறிலங்கா அரசாங்கம் நாடியிருப்பதாகவும் திறைசேரி வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

சிறிலங்கா வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்திற்கென 1530 கோடி ரூபா ஒதுக்கப்பட்டது ஆனால் எதிர்பார்த்ததைவிட இராணுவச் செலவீடு அதிகரித்தமையால் மேலும், 500 கோடி ரூபாவிற்கு மேல் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பாதுகாப்பு வரியை ஒரு வீதத்தில் இருந்து மூன்று வீதமாக அரசு அதிகரித்தமையால், சுமார் 200 கோடிரூபாவை திரட்டக் கூடியதாகவும் இருந்தது ஆனால், பாதுகாப்பு செலவினத்திற்குத் தேவையான மிகுதித்தொகையை திரட்டுவதற்காகவே தற்பொழுது அவசர உதவியாக 400 கோடி ரூபா உதவியை சிறிலங்கா அரசாங்கம் உலக வங்கியிடம் கடனாகக் கோரியுள்ளது. இந்நிதியுதவிகிடைக்கும் பட்சத்திலேயே தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சற்றுச் சமாளிக்கலாம் என திறைசேரி வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

## வாழைச்சேனை அகதிமுகாம்; முஸ்லிம்கள் கெடுபிடி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையிலுள்ள பேற்றாலை அகதி முகாமிலிருந்து இரண்டு தமிழர்களை முஸ்லிம் கும்பலொன்று கடத்திச் சென்றுள்ளது.

கடந்த நான்கு நாட்களாக இந்த அகதி முகாமிற்கு செல்லும் முஸ்லிம்கள் அங்குள்ள தமிழ் மக்களை அச்சுறுத்தி வருகின்றனர்.

இந்த முகாமிலிருந்து ஏற்கனவே 8 தமிழ்மக்கள் முஸ்லிம்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது. முத்துக்கல தமிழ் கிராமத்திலிருந்து முஸ்லிம்களின் வன்முறைகளால் இடம்பெயர்ந்த மக்களே இம்முகாமில் தங்கியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா கடற்படையில் புதிதாக 3 பீரங்கிக்கப்பல்கள்

(திருக்கோணமலை)

சிறிலங்கா கடற்படையில் மூன்றுநவீனபீரங்கி கப்பல்கள் திருக்கோணமலை துறைமுகத்தில் வெள்ளோட்டம் விடப்பட்டன.

ஈரானில் தயாரிக்கப்பட்ட இந்த மூன்று அதிவேக பீரங்கிக் கப்பல்களில் நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவை வ பகுதி கடலில் ரோந்துக்கென பயன் படுத்தப் படுமென கடற்படை வட்டாரங்கள் தெரிவித்தன.

## போலிக் கடவுச்சீட்டுடன் சிங்கப்பூரில் பிடிபட்ட 4 இலங்கைத் தமிழர் திருப்பி அனுப்பப்பட்டனர்

போலியான கடவுச்சீட்டுக்களை வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று இலங்கைப்பெண்களும், ஒரு ஆணும் சிங்கபபூரில் ... பைச் சேர்ந்தவரான திருச்செல்வம் கிரிசனி அந்தோனி முல்லைத்தீவைச் சேர்ந்த வைத்தியலிங்கம் ஜெகநேசன் ஆகிய இந்நால்வரும் நீர்

## அரசிற்கு கடன் வழங்க உலக வங்கி கடும் நிபந்தனை

(கொழும்பு)

உலக வங்கியிடம் இருந்து கடன் உதவியை நாம் பெறுவதற்கு அவ் வங்கி கடுமையான நிபந்தனைகளை விதிக்கும் என பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அரசாங்க ... போது உலக வங்கியுடன் பேசிக் கொண்டிருப்பதாகவும், இந்தக் கடன் தொகையினை வழங்குவதற்கான நிபந்தனைகள் கடுமையாக அமையக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார். என்றும், சீர்திருத்தத்தை அமுலாக்குவது தமக்கு சிரமமாகவே இருக்குமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொடர்ந்து தகவல் அளித்த அவர்; உலக வங்கியின் உத்தி யோகத்தர்கள் தற்போது

## வீரச்சாவு

### வீரவேங்கை மணிமுடி

18-07-92 அன்று இயக்கச்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிமோதலில் விடுதலைப் புலிகள்போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார். வீரச்சாவடைந்த வீரவேங்கை மணிமுடி (குட்டி) தனபாலசிங்கம் தெய்வீகநாதன், அல்லாரை தெற்கு, அல்லாரை என்னும் போராளிக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## அமைப்பாளராக நியமனம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கம்பஹாமாவட்டஅமைப்பாளராக திருமதி சந்திரிகா குமாரரணதுங்காவை நியமித்துள்ளது. நேற்று முன்தினம் வைபவரீதியாக நிகழ்ந்த இந்த நியமனத்தில் கலந்து கொண்டு பேசிய திருமதி சந்திரிகா தன்னைக் கட்சியைச் சேர்ந்த பலரும் வரவேற்க முன்வந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வாஞ்சி நாதனின் 'நெருப்பு மழை' நாளை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கவிஞர் மு.வே யோ. வாஞ்சிநாதனின் ''நெருப்பு மழை'' என்னும் கவிதைத் தொகுதி நூல்வெளியீட்டு விழா நாளை பிற்பகல் 4 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் யாழ். மாவட்ட அரசில் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தளபதி செல்வராசா மங்கள விளக்கேற்றி வைக்கின்றார். தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் இளங்குமரன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

நிதர்சனப் பொறுப்பாளர் பரதன் முதற் பிரதியைப் பெறுவார் ஆய்வுரைகள் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## க.பொ.த உயர்தரப் பரீட்சார்த்திகள் கவனிக்க

(கொழும்பு)

களை உபயோகிக்கலாம் எனப்

பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து மூன்று இலங்கைப்பெண்களும், ஒரு ஆணும் சிங்கபூரில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான வசந்தரூபி சிவப்பிரகாசம், மனோராணி ராககுலன் ஆகியோரும், கொழும்மு ல்லைத்தீவைச்சேர்ந்த வைத்தியலிங்கம் ஜெகநேசன் ஆகிய இந்நால்வரும் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட்முன் ஆஜர் செய்யப்பட்டனர். ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 4,500/- அபராதம் விதிக்கப்பட்டது. கடவுச் சீட்டுகள் அழிக்கப்பட்டன.

அரசிற்கெதிரான

## கையெழுத்து வேட்டை புதன்கிழமை ஆரம்பம்

(கொழும்பு)

''ஜனாதிபதிக்கு எதிராக அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதியுடன் ஒருவருடம் பூர்த்தியாகிறதை குறிக்குமுகமாக பத்து லட்சம் மக்களிடம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை புதனன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த எழுத்துப் பட்டியல் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படும் ஜனாதிபதி ராஜினாமாச் செய்ய வேண்டும் என கோருவோம்''

இவ்வாறு ஜனநாயக தேசிய முன்னணியின் தலைவர்களான முன்னாள் அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலியும், காமினி திஸாநாயக்காவும் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

பாராளுமன்றத்தில் அரசியல் குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு ஒகஸ்ட் 28 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிறது. இக்காலகட்டத்திற்குள் பத்து லட்சம் மக்களிடம் கையெழுத்து பெறப்படும். இந்த மனுவை பெற்றுக் கொள்ளுமாறு பொரளை கெம்பல் பூங்காவில் பொதுக் கூட்டம் நடத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

யான நிபந்தனைகளை விதிக்கும் என பெயர் குறிப்பிட விரும்பாத சிரேஷ்ட அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

400 கோடி ரூபா கடன் பெறுவதற்காக இலங்கை தற்நிபந்தனைகள் கடுமையாக அமையக்கூடும் என்றும் அவர் தெரிவித்தார்.

வங்கியின் துரித சீர்திருத்த நடவடிக்கைகளை செய்ய சில வேளைகளில் அரசியல் ரீதியாக சாத்தியப்படமுடியாது தொடர்ந்து தகவல் அளித்த அவர்; உலக வங்கியின் உத்தியோகத்தர்கள் தற்போது கொழும்பில் இருக்கிறார்கள்.

நிதியமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் தலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்காவின் கடன் தொகை ரூ.360,000 மில்லியன். அதிகம்

(கொழும்பு)

சிறிலங்காவின் கடன் தொகை 360,000 மில்லியன் ரூபாவை தாண்டி விட்டதாக மத்தியவங்கி அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியிலேயே சிறிலங்காவின் கடன்தொகை 360,000 மில்லியனிலும் அதிகமானதாகும் இதில் 60 சதவீதம் வெளிநாடுகளில்இருந்து பெறப்பட்டதாகும்.

1991 ஆம் ஆண்டின் முதற் காலாண்டுடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு அரசின் செலவினம் 44 வீதத்தால் அதிகரித்த போதிலும் வருமானம் 18 வீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது.

இவ்வாறு அந்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(கொழும்பு)

அடுத்தமாதம்முதலாந்திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்க மூன்று வகையான அடையாள அட்டைகளை உபயோகிக்கலாம் எனப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டை தபால் திணைக்கள அடையாள அட்டை, பாஸ்போர்ட் ஆகியவற்றில் ஏதாவது ஒன்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அதிபர்கள் பெறும் அதிகரித்த தொகை மாற்றம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப்பட்டு வரும் அதிகரித்த தொகை பாடசாலைகளின் தரத்துக்கேற்ப அதிகரிக்கப்படவுள்ளன.

புதிய அதிகரிப்புப்படி தேசிய பாடசாலைகளின் அதிபர்களுக்கு கிடைத்துவரும் 200 ரூபா இனி 375 ரூபாவாக வழங்கப்படும்.

மகா வித்தியாலயங்கள் 200 ரூபாவிலிருந்து 300 ரூபாவையும் தரம் இரண்டு பாடசாலைகள் 150 ரூபாவில் இருந்து 250 ரூபாவாகவும் ஆரம்ப பாடசாலைகள் 100 ரூபாவில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## அஞ்சல் அடையாள அட்டை விண்ணப்பப்படிவம்இல்லை

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள பெரும்பாலான தபாற்கந்தோர்களில் அஞ்சல் திணைக்கள அடையாள அட்டை விண்ணப்பப் படிவங்கள் இல்லாததினால் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலையில் பெருந்தொகையான மாணவர்கள் உள்ளனர்.

கடந்த பல மாதங்களாக இதற்கான விண்ணப்பப்படிவங்கள் கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்படவில்லை என தபால் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பதினாறு வயதிற்குட்பட்ட

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முந்தல் பகுதி சுற்றிவளைப்பு 33 தமிழர் பொலிசாரால் கைது

(மட்டக்களப்பு)

முந்தல்பகுதியிலுள்ள கருங்காலிச்சோலை தமிழ்க் கிராமத்தை கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 3.00 மணியளவில் திடீரென சுற்றிவளைத்த சிறிலங்கா பொலிசார் வீடு வீடாக தேடுதல் நடத்தி 33 பேரைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட இவர்கள் அங்கு பொலிசாரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் மூன்றுபேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று வாலிபர்களும் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும்,

இந்த மூவரில் முந்தல் பகுதியில் நீண்ட நாட்களாக தொழில் புரிந்து வரும் இருவர் அடங்குகின்றனர் என்றும் மூன்றாவது இளைஞர் கருங்காலிச்சோலை சிறிமுருகன் ஆலய திருவிழாவைப் பார்த்த பின்னர் நண்பர்களுடன் அங்கு தங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்காக

# யாருடனும் பேசவும் தயார்; யாரையும் கைவிடவும் தயார்

**- பிரேமதாசா**

(கொழும்பு)

''எமது மக்களை வாழ்விக்க யாருடனும் நாம்பேசத்தயார். மக்கள் நலனைக் கருதி யாரையும் கைவிடவும் நாம் தயார்'' என சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

மத்தியகொழும்பு ஐ.தே.க. வருடாந்த மாநாட்டில் உரையாற்றியஅவர் இதனைத்தெரிவித்தார். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில்;

ஐ.தே.க.வின் அத்திவாரம் உறுதியானது. எந்தவொரு சூறாவளியாலும் அதனை அசைக்க முடியாது. 1977ஆம் ஆண்டு முதல் இது தொடர்ச்சியாக வெற்றி பெற்று வருகிறது. மக்களின்ஆதரவில்உறுதியடைந்துள்ள ஐ.தே.க. வை தோற்கடிப்பது கடினம்.

எமது முன்னேற்றப் பாதையை எந்தத் தடையும் பாதிக்காதுதடைகளைச்கண்டு நாம் பின் வாங்க மாட்டோம். முன்னேறிச் செல்வோம்.

35 லட்சம் மக்கள் ஐ.தே.க. வில் அங்கத்துவம் வகிக்கின்றனர். எனவேஉறுதியானஅத்திவாரத்தைக் கொண்ட ஐ.தே.க. வை எந்த சூறாவளியும் அசைக்க முடியாது எத்தகைய காற்றுக்கும் அது அசைந்து கொடுக்காது. எமது ஆட்சிக்குபலதடைகள்ஏற்பட்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பேசாலை அகதி முகாமிலிருந்து தமிழரை வெளியேறுமாறு மிரட்டல்

(மன்னார்)

பேசாலை அகதி முகாமில் தங்கியிருக்கும் தமிழ்மக்களை அங்கிருந்து வெளியேறி விடுமாறு சிறிலங்கா ராணுவம் காலக்கெடு விதித்துள்ளது.

பேசாலைஅகதி முகாமிலுள்ள தமிழ்மக்களை தமது சொந்த இடங்களில் சென்று குடியேறுமாறும் முகாமில் தொடர்ந்து தங்க அனுமதிக்க முடியாது எனவும் இராணுவத்தினர் மிரட்டியுள்ளனர்.

தமது வீடுகள் யாவும் சூறையாடப்பட்டும் சேதமாக்கப்பட்டும் உள்ளதாலும் இடம்பெயர்ந்த பல தமிழ் மக்களின் வீடுகளில் முஸ்லிம்கள் அது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அழுத்த கண்ணிவெடிகளால் கவச வாகனம் தகர்ப்பு

(கொழும்பு)

குறைந்தபட்சம் 1990 இல் இருந்தாவது புலிகளின் அழுத்தத்தால் தொழிற்படும் தானியங்கி கண்ணிவெடிகளை உபயோகித்து வருகின்றனர். இத்தகைய ஒரு கண்ணி வெடியினாலேயே எமது கவசவாகனமொன்று தகர்க்கப்பட்டது.

மேற்கண்டவாறு கொழும்பு கிராமோதய மத்திய நிலைய

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## 200 நாடகங்கள்

யாழ்ப்பாணம் பேச்சு வழக்குத் தமிழில் முதன் முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான - 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் ; கெட்டிக்காரர்கள் 25/-, முதலாம்பிள்ளை 30/- (2749)

## உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள்

பாவித்த தரமான மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும். விற்கப்படும். உதிரிப்பாகங்களுக்கான மணிக்கூடுகள் றேடியோக்கள் வாங்கப்படும் மணிக்கூடுகள், றேடியோ ரீவி, டெக் யாவும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். எமது புதிய முகவரி 'டில்கா வாச் வேக்ஸ்' (வானவில் கூல்பார் அருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (2825)

## தொடர்புகொள்ளவும்

பாவித்த சகலவிதமான ஆங்கில வீடியோ படக் கசற்றுகள் நியாய விலைக்கு வாங்கப்படும். தொடர்பு:- நியூவிக்ரேஸ் 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (2831)

## ENGLISH COURSE
## ஆங்கிலம்

ENGLISH GRAMMAR
ENGLISH LITERATURE
SPOKEN ENGLISH

3 மாதப் பயிற்சி, கிழமையில் 2 நாட்கள். *V. N. Kandasamy A. I. B. Part I (London) Inter (London)* 87. திருநெல்வேலி றோட் (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில். (2832)

## பதியவும்

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அல்லது பிரதேசச் செயலர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழும் 'இ' அட்டையுடைய குடும்பங்களின் தலைவர்கள், தற்போது தாங்கள் வசிக்கும் பிரிவு கிராமசேவகர்களிடம் தமது விபரங்களைப் பதியுமாறு கோரப்பட்டுள்ளனர். இந்த விபரங்களைப் பதியும்


# கணவரை விடுவிக்கக் கோரி நீதிமன்றில் மனைவி மனு

இராணுவத்தால் கைதாகி தற்சமயம் எங்கிருக்கிறார் என்பது தெரியாதிருக்கும் பெரியபோரதீவு வாசியான செல்லத்துரை அழகேந்திரன் என்பவரை விடுதலை செய்யுமாறு கோரி அவரது மனைவி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்துள்ளார்.

அம்மனுவில் அவர் தெரிவித்திருப்பதாவது நகைத்தொழிலாளியான எனது கணவர் கொழும்பிலிருந்து மட்டுநகர் நோக்கி வந்தபோது 16.9.90 இல் கொம்மாந்துறை இராணுவ சோதனைச்சாலையில் ஊர்காவல்படைமற்றும் இராணுவத்தால் கைது செய்யப்பட்டார். அதன் பின் அவரது இருப்பிடம் தெரியவில்லை.

இம்மனுவை ஏற்று மேன்முறையீட்டுக்கு நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளது.

# ஓராம் ஆண்டு வீர அஞ்சலி



தாயின் மடியில் 20 — 07 — 1969

ஈழ மண்ணில் 16 — 07 — 1991

## கப்டன் கில்
### ( சண்முகம் தபேந்திரன் )

*16 - 07 - 1991* அன்று ஆனையிறவு முகாம் தாக்குதலின் போது வீரச்சாவு

தமிழினத்தின் விடிவிற்காய் புலிவீரனாய் நின்று
இம் மாவீரன் ஆற்றிய பங்கு மகத்தானது.
இவன் கனவை நினைவாக்க
எமது தலைவனின் பாதையில்
ஆயிரமாயிரம் வீரர்கள் அணிவகுத்து நிற்பர்.
பாயும் புலியின் வாயில்
சிங்களம் குதறப்புட்டுக் கிழிக்கப்படும் பொழுது
அன்றோ சிங்களம் மரண ஓலமிடும்.
அழிந்து கொண்டிருக்கும் எம் இனத்தின் அழுகுரலைக்
கேட்டும் கேட்காமல் இருக்கும் இவ்வுலகத்தின்காதுகளில்
நிமிர்ந்து நின்று முழங்குவோம்
ஒடுக்கப்பட்ட எங்கள் தமிழினம் விடுதலை வென்றதென்று.

உறவினர்கள், நண்பர்கள்.

செல்வபுரம் வடக்கு,
வவுனிக்குளம், மாங்குளம், முல்லைத்தீவு.

( 2844 )

# இறுதிக் கட்டப் போட்டிகள் விரைவில் நடைபெறும்

(விளையாட்டு நிருபர்)

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் நடத்தப்பட்டு வந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இறுதிக்கட்டத்தை அண்மித்துள்ளது.

16ம்திகதி வியாழக்கிழமை சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இப்போட்டித் தொடரில் இடம்பெற்ற அரை இறுதிப் போட்டிகளில் முதலில் இடம் பெற்ற போட்டியில் பாஷையூர் சென் அந்தனீஸ் அணி அதனை எதிர்த்து ஆடிய சென் மேரிஸ் அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்ததுஅதனைத் தொடர்ந்து இடம்பெற்றஇன்னொரு அரை இறுதிப் போட்டியில் குருநகர் பாடுமீன் அணி நாவாந்துறை சென்நீக்கிலன் அணியை 2-0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

இவ்வருடத்தில் இடம்பெற்ற பல்வேறு போட்டிகளில் இவ்விரு அணிகளும் முன்பு மூன்று தடவைகள் இறுதிப் போட்டியில் மோதியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (42)

## திருமண பதிவு

ஆவரங்கால் கிழக்குப் பகுதியில் முன்பு திருமணப் பதிவு செய்யாது தேசவழமைப்படி இல்லற வாழ்க்கையில் ஈடுபட்ட நாற்பது குடும்பங்களுக்கு 'லிங்கம்' மத்திய சன சமூக நிலையத்தில் உள்ளூராட்சி ஆணையாளரின்ஆலோசனையுடன் வலி கிழக்குப் பகுதி விவாகப்பதிவு அலுவலர் திரு. சு. தில்லையம்பலவாணரால் திருமணப்பதிவு நிறைவேற்றப்பட்டது.

# ஆறு மாத காலத்தில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடம் முதல் ஆறுமாத காலத்திலும் தேயிலை உற்பத்தியில் 3 கோடியே 45 லட்சம் கிலோ தேயிலை வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.

இவ்வருடம் முதல் ஐந்து மாத காலப்பகுதியிலும் 6 கோடி 85 லட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. ஆனால் சென்ற ஆண்டில் இதே காலப்பகுதியில் 10 கோடியே 34 இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது. 1991 ஆம் ஆண்டில் மொத்தமாக 24 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது, 1992ஆம் ஆண்டில் மொத்தமாக 20கோடிகிலோ தேயிலை உற்பத்தி செய்யப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

தேயிலை உற்பத்தியில் இலங்கையில் மட்டுமல்ல ஏனைய தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளிலும் உற்பத்தியில் வீழ்ச்சி காணப்பட்டுளது.

## சிந்து பால் வெல்ல உற்பத்தி

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், அப்பாள் நகர், விநாயகபுரம்ஆகியபகுதிகளில் பசும்பாலில் இருந்து பால் வெல்லம் தயாரிக்கும் முயற்சியினை, கிராமிய மட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட தமிழீழ ஆய்வுநிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

இங்கு பாலில் இருந்து சிந்து பால் வெல்லம் தயாரிக்கப்படுகிறது. மேலும் மாதம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$ லட்சம் வரையான பால்வெல்லக் கட்டிகள் தயாரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. இம் முயற்சியினால், கால் நடை வளர்ப்பாளர் பாலை சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெறுவதுடன் இருபத்தைந்து பெண்கள் இதில்வேலை வாய்ப்பினையும் பெற்றுள்ளனர்.

# தமிழீழத்தில் சூரியகாந்தி எண்ணெய் வித்து உற்பத்தி

[நமது நிருபர்]

தமிழீழத்தில் எண்ணெய் வித்து உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்குடன், விவசாயிகளுக்கு விதையினங்களை வழங்குவதற்காகவென தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கோப்பாய் மாதிரிப் பண்ணையில் சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்படும் எண்ணெய் வித்துக்கள் 92/93 பெரும் போகச் செய்கை காலத்தின் போது விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

சூரியகாந்தியில் துருக்கி, ஸ்பெயின், பெரடோரியா ஆகிய வர்க்கங்களும் ஆமணக்கில் ஹசீரா வர்க்கமும் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

# மாகாணசபை செலவு; விபரம் தெரிவிக்க பணிப்பு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாண சபையின் கடந்தகால செலவினங்கள் தொடர்பான சகல விபரங்களையும் விரைவில் சேகரித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்ன பணித்திருப்பதாக மாகாண சபை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

சிலதினங்களுக்கு முன்னர் ஆளுநர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளதாகவும்,

முன்னைய மாகாணசபை உறுப்பினர்கள் மாகாண அமைச்சர்கள் மேற்கொண்ட செலவினங்கள் மற்றும் வடக்கு கிழக்கு மாகாண சபையின் கடந்தகால கொள்வனவுகள் பற்றிய விபரங்கள் யாவும் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் இந்தப் பணிப்புரையில் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

# பங்கீட்டு அட்டைக்கு சீனி, சோப் விநியோகம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு டலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பங்கீட்டு அட்டை ஒன்றிற்கு இரண்டுகிலோசீனி. இரண்டு சோப் என்பன வழங்கப்படுகின்றன.

நிவாரணக் கிளைகள் தவிர்ந்த கிளை ஒன்றில் இவ் விநியோகம் மேற்கொள்ளப்படுவதாகவும், பங்கீட்டு அட்டை வைத்திருக்கும் சகலரும் மேற்படி பொருட்களைப் பெறலாம் என்றும் சங்கத்தின் பதில் பொது முகாமையாளர் செல்வி செல்வவதனா தெரிவித்துள்ளார். (22)

# நினைவுகூருகின்றோம்..
## 1992 - 07 - 20

*1987* ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரச்சாவெய்திய -

★ **வேலாப்போடி தேவகவி** (ஆயித்தியமலை, மட்டக்களப்பு)

★ **கதிர்காமத்தம்பி கிருஸ்ணவேணு** [ஆயித்தியமலை, மட்டக்களப்பு]

★ **போகன்** (ப. மோகனதாஸ் - மணற்சேனை, திருக்கோணமலை)

★ **கிருஸ்ணபிள்ளை இன்பராசா** (சல்லிப்பிட்டி, திருக்கோணமலை)

மட்டக்களப்பு-கோரக்கல்லி மடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் எரிக்கப்பட்ட வீட்டினுள் கருகி மாண்ட மூன்று வயதுக் குழந்தை.

*1990* ஆம் ஆண்டு பூநகரி - கொம்படிப் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**சேவியர்** [ஐயம்பிள்ளை இரத்தினபாலசிங்கம்-வட்டக்கச்சி, கிளிநொச்சி]

மட்டக்களப்பில், இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட விவசாயியான வந்தாறுமூலை, செட்டியார் வீதியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

*1991* ஆம் ஆண்டு ஆனையிறவு தகர்ப்பு முயற்சியாக மேற்கொள்ளப்பட்ட ஆ.க வெ. நடவடிக்கையின்போது அப்பகுதி இராணுவத்தினருக்குத் துணையாக வெற்றிலைக்கேணியில் தரைஇறக்கப்பட்டு முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் ஈழவன்** [குமாரசாமி ரமேஸ்குமார் - 19/1, ஐயனார்கோயிலடி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்]

**லெப். ராகுலன்** [வேலாயுதம் ஜெயரூபன் - மாடி வீடு, வாழைச்சேனை, மட்டக்களப்பு]

**லெப். கொலின்/காந்தி** [சண்முகானந்தன் மணிவண்ணன் - பிள்ளையார்கோயிலடி, மயிலிட்டி, யாழ்]

**லெப். மேகன்** (பொன்னம்பலம் தமிழழகன் - வேம்

குடும்பங்களின் தலைவர்கள், தற்போது தாங்கள் வசிக்கும் பிரிவு கிராமசேவகர்களிடம் தமது விபரங்களைப் பதியுமாறு கோரப்பட்டுள்ளனர்.

இந்த விபரங்களைப் பதியும் பணி நாளை நடைபெறவுள்ளது என்று நல்லூர் உ. அ. அ. திரு. மகாலிங்கத்தின் பத்திரிகைக் குறிப்பு ஒன்று தெரிவிக்கின்றது.

## உற்பத்தியில் மருமுகாம் மக்கள்

மடு அகதி முகாமிலுள்ள பெருமளவு மக்கள் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். முகாமில் தங்கிஇருந்து கொண்டு சுமார் 10,15 மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்குச் சென்று விவசாயம், தோட்டம் செய்வதிலும், பலர் வியாபார நோக்கில் வவுனியா போன்ற இடங்களுக்குச் சென்றுவருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. பகல் வேளைகளில் சுமார் ஐயாயிரத்துக்குமேற்பட்டவர்கள்வெளியே சென்றுவருவதை அவதானிக்க முடிகிறது.

## குளம் புனரமைபபு

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தனங்கிளப்பு பனங்காய்குளம், கொத்தணை வாய்க்கால் புனரமைப்பு வேலைகளும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சங்கரத்தைக் குளம், நாநாவாரிக் குளம் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் குளப் புனரமைப்பு வேலைத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் ஒன்பது குளங்களும், இரண்டு வாய்க்கால்களும், சங்கானைஉதவி அரசாங்கஅதிபர் பிரிவினுள் மூன்று குளங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

---

உறவினர்கள், நண்பர்கள்.


செல்வபுரம் வடக்கு,
வவுனிக்குளம், மாங்குளம்,முல்லைத்தீவு.

(2844)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 28 — 03 — 1972



தாயக விடிவில் 20 — 07 — 1991

## வீரவேங்கை தர்சினி

(அருளம்பலம் றஞ்சினி)

(கட்டைக்காட்டில் 20- 07- 1991 இல் நடைபெற்ற ஆகாய கடல் வெளித்தாக்குதலின் போது வீரச்சாவு)

எங்கள் இனிய றஞ்சியே! வயலினுடன் வாய்பாட்டும்
உயர்கல்வியும் கற்கவா இது நேரம் என்பாய்
மண்ணை நீ நேசித்தாய். - தர்சினியாய்
மண்ணதை மீட்க களம் நோக்கிப் புறப்பட்டாய்
கட்டைக்காட்டினிலே தாயகத்தை முத்தமிட்டாய்
நீ சென்று ஓராண்டென்ன - ஓராயிரம்
ஆண்டு சென்றாலும் உனை எண்ணி வாடுகின்றோம்
தாயகத்தின் விடிவிக்காய் தரணியில் - தர்சினியான
உன் அழகுமிகு பாதங்களைத் தேடி
எம் பயணம் தொடர்கிறது.

இன்று [20- 07- 1992] வீட்டில் நடைபெறும் நினைவஞ்சலி வைபவத்தில் சகபோராளிகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
ஐயா, அம்மா, அண்ணாமார்
அக்காமார், தங்கைமார்
உறவினர்கள்.

இல. 57. D. 10
உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(2773)

---

ங்குவதற்காகவென தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் கோப்பாய் மாதிரிப் பண்ணையில் சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்துக்கள் உற்புத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இங்கு உற்பத்தி செய்யப்

சூரியகாந்தியில் துருக்கி, ஸ்பெயின், பெரடோரியா ஆகிய வர்க்கங்களும் ஆமணக்கில் ஹசீரா வர்க்கமும் விதை உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

150 கிலோ சூரியகாந்தி விதையிலிருந்து ஐம்பதுகிலோ எண்ணெய் எடுக்கலாம். கொலஸ்ரோல் அற்ற சூரியகாந்தி எண்ணெயை உணவாகவும் மாஜரீன் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.அத்துடன் சூரியகாந்தி பருப்பை பச்சையாகவோ வறுத்தோ உண்ணலாம். சூரியகாந்தி எண்ணெய் பெறப்பட்டதன் பின் மிஞ்சும் பிண்ணாக்கு சிறந்த கால்நடைத் தீவனமாகும்.மேலும், சூரியகாந்தி எண்ணெய் பல கைத்தொழில் தேவைக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

---

## மகோற்சவம்

புத்தூர் அருள்மிகு ஸ்ரீவிசாலாட்சி உடனமர் ஸ்ரீவிசுவநாத சுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த மகோற்சவம் 23-07-1992 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றவைபவத்துடன் ஆரம்பமாகி வரும் 31-07-1992 இல் தேர்த் திருவிழாவும் 01-08-1992 இல் தீர்த்த உற்சவமும் மறுநாள் பூங்காவனத்துடன் உற்சவம் நிறைவுறவுள்ளதாக மேற்படி ஆலயபரிபாலனசபை அறிவித்துள்ளது.

---

# 1 - ம் ஆண்டு நினைவஞ்சலி


புவியின் மடியில்

09 - 10 - 1972

❁ ❁ ❁

புனிதனின் அடியில்

20 - 07 - 1991



## கப்டன் ஈழவன்

(செல்வன் குமாரசாமி ரமேஷ்குமார்)

அழகு தமிழ் சைவம் வாழும்-
ஐயனார் கோவிலடி தந்த மகவு இதுவென்று மனை
மகிழ்ந்த வேளை பழகு நடை மறந்து தலைவன் படைதனில்
இணைந்து ஈழமாமுனைப் போரில் இலங்கை படையினை
எதிர்த்து மாவீரனானாயோ!

உன் வீரச்சாவை நினைவு கூரும்

பெற்றோர்,
சகோதர சகோதரிகள்

19/1 ஐயனார் கோவிலடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

( 2846 )

---

பண்ணை, யாழ்ப்பாணம்]

**லெப். ராகுலன்** [வேலாயுதம் ஜெயரூபன் - மாடிவீடு,வாழைச்சேனை,மட்டக்களப்பு]

**லெப். கொலின்/காந்தி** [சண்முகானந்தன் மணிவண்ணன் - பிள்ளையார்கோயிலடி, மயிலிட்டி, யாழ்]

**லெப்.மேகன்** (பொன்னம்பலம் தமிழழகன் - வேம்பிராய், நாவற்குழி கிழக்கு,யாழ்ப்பாணம்)

**லெப்.அர்ஜுன்** (சிவானந்தன் நந்தகோபால் - 67, மணையாவெளி, திருக்கோணமலை)

**கில்பேட்** (மயில்வாகனம் விஜயகுமார்-900,செல்வபுரம், திருக்கோணமலை)

**விஜி** (செல்லத்துரை சிற்றம்பலம்-இ.வி. வீட்டுத்திட்டம், மட்டக்களப்பு)

**லலித்** (வேல்முருகு விஜயகுமார் - குச்சவெளி, திருக்கோணமலை)

**நேரு** (சாம்பமூர்த்தி குமரேசன் - புத்தூர் மேற்கு, யாழ்ப்பாணம்)

**ஜெயா** (முருகையா ஜெயசீலன் - புதுமுறிப்பு, உருத்திரபுரம், கிளிநொச்சி)

**2-ம் லெப்.விஜயா** (ஜெயவதனி தம்பிப்பிள்ளை - 'ஜெயவாசா' அல்வாய் தெற்கு, யாழ்ப்பாணம்)

**2-ம்லெப்.பானுமதி** (செல்வக்குமாரி செல்வராசா- நெடுங்கேணி, மணலாறு)

**யூலியட்** (ஆன் அனுசியா மரியதாஸ் - இல:40ஜெயந்தி நகர், கிளிநொசசி)

**நாகேஸ்வரி** (பிரபாவதி சந்தான்-சென்.மேதாஸ் வீதி, அடம்பன், மன்னார்)

**தர்சினி** (ரஞ்சினி அருளம்பலம் - உருத்திரபுரம், கிளிநொச்சி)

**சோபிகா** (பராசக்தி கந்தசாமி - ஏழாலை மேற்கு, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு - பள்ளத்துச்சேனைப் பகுதியில், எதிர்பாராதவிதமாகத் துப்பாக்கி வெடித்ததில் எம்மைப் பிரிந்த —

**ஜீவா** (நடராசா ரவி - கல்முனை 02, அம்பாறை)

**ராமன்** (உதயகுமார் - கிரான், மட்டக்களப்பு)

மணலாறு நித்திகைக்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய —

**நிதி** (காத்தமுத்து சிவகுமார் - இலுப்பையடிச்சேனை, பன்குடாவெளி, மட்டக்களப்பு)

மன்னார் - வங்காலை முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய —

**வீனஸ்**

தமிழீழக் கடற்பரப்பில் (கற்கோவளம்-காரைநகர்) தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் அதிர்ச்சியினால் பலியான தமிழ்க்கடற்றொழிலாளி

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4725]

### சிந்தனைக்கு

வீதியிலே மணியடித்து விற்பனை செய்ய,
ஒரு பாதி இன்பக் கனவுகளும், மறுபாதி துன்பக் கனவுகளும்,
எடுத்து வரும் வர்த்தகரிடம் எதை நீ வாங்குவாய்?

— தாமஸ் லோவெல் பெட்டோஸ்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-07-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## எதிர்க்கட்சிகளின் பலவீனமான போராட்டம்

சிறிலங்காவில் ஆட்சியிலுள்ள ஐக்கிய தேசிய கட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகள் பல போராட்டங்களை தொடர்ச்சியாக அறிவித்து வருகின்றன. பாதயாத்திரை, ஒலி எழுப்பும் போராட்டம் என சில போராட்டங்களை எதிர்க்கட்சிகள் நடத்தியுமுள்ளன. தற்பொழுது பல புதிய போராட்டங்களையும் அறிவித்தும் உள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவிற்கும் அவரது அரசுக்கு எதிராகவும் தாம் மாபெரும் பிரசார இயக்கம் ஒன்றை நடத்தப் போவதாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் கூட்டாக அறிவித்துள்ளன. அத்தோடு, ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பிரேமதாசாவிற்கு எதிராக பத்து லட்சம் பேரிடம் கையொப்பம் வாங்கும் வேட்டையிலும் இறங்கியுள்ளது.

மேலும் தனித்து திரு. பிரேமதாசாவிற்கு எதிராக நான்கு நாள் போராட்டம் ஒன்றை சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுரா பண்டார நாயக்கா தலைமையில் நடத்தப் போவதாகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவித்துள்ளது.

இவ்வாறாக, அரசிற்கெதிராகப் போராட்டம் நடத்த முற்படும் எதிர்க்கட்சிகள் பிரேமதாசா அரசாங்கம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்வதாகவும், தமது சொந்த விளம்பரத்திற்கு அரசு பணத்தைப் பயன்படுத்தி வருவதாகவுமே குற்றம் சாட்டுகின்றன.

இதேவேளை, தற்பொழுது தலைமறைவு வாழ்க்கை நடத்திவரும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொல, இவ்வருட இறுதிக்குள் அரசின் முகமூடியைக் கிழித்தெறியப் போவதாத் தெரிவித்துள்ளார். 40,000க்கு மேற்பட்ட சிங்களவரை படுகொலை செய்த கறுப்பு பூனைகளுக்கு அரசுவிசேட படியாக 3000 ரூபாவும், ஏனைய சலுகைகளும் உபகரணங்களும் வழங்கியதாவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் முன்னாள் பிரதிப்பொலிஸ்மா அதிபர் "ஆகியோர் கூறும் குற்றச்சாட்டுக்கள் யாவும்உண்மையாகஇருப்பினும், இவர்கள் நடத்திய

# அபார துணிவு, மின் வேகம், போர்த்திறன்

# தாக்குதல் வெற்றியின் இரகசியம் இதுவே

## வன்னி முகாம் தகர்ப்பு பற்றி விசேட தளபதி தீபன்



முகாம் தகர்ப்பில் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கு விசேட தளபதி தீபன் இறுதி அஞ்சலி செலுத்துகிறார்.

**இம்மாதம் 11ஆம் திகதி அதிகாலை வண்ணான் குளம் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகத் தாக்கி அழித்தனர். இத்தாக்குதல் குறித்து வன்னிமாவட்ட விசேட தளபதி தீபன் ஈழநாதத்திற்கு அளித்த விசேட பேட்டியை இங்கு தருகிறோம்**

"வண்ணான் குளம் முகாம் எதிரியின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் அமைந்திருந்தது. எமது வீரரின் தளராத உள்ளம், எதையும் சமாளிக்கும் ஆற்றல் - இவை பொருந்திய செயலாற்றும் துணிச்சல், கூர்மையான போர் நுணுக்கம், புதிய தந்திரோபாயம் ஆகியன எமது முயற்சிக்குப் பக்கபலமாய் அமைந்தன. துணிச்சலோடு சேர்ந்த எமது வேகம்தான் வெற்றிக்குக் காரணம்''

இவ்வாறு கூறுகிறார் வன்னி மாவட்ட விசேட தளபதி தீபன்.

ஈழநாதம் பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது;

வவுனியா மாவட்டம் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் எல்லை மற்றும் அனுராதபுர மாவட்ட எல்லைப் புறத்தில் அமைந்திருப்பது வண்ணான்குளம் இராணுவ முகாம். அதனைச் சுற்றியுள்ள பகுதி காடும், காட்டைச் சார்ந்த இடமுமாகும். பல காலமாக — காட்டின் அமைப்பிலே தமிழ் ஈழ எல்லைப்புற வேலிகளாக அமைந்துள்ள மக்கள் வெளியேறி விட்டனர். புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டோம், அடக்கி விட்டோம், ஒடுக்கி விட்டோம் என்று இராணுவம் வேறு பிரசாரத்தில் இறங்கியிருந்தது.

இந்த எல்லைப்புற முகாம் மீது பாரிய தாக்குதல் நடத்த வேண்டும் என்று முடிவு செய்து, மிகக் குறுகிய காலத்தில் விசேட வேவுப் பிரிவுகள் மூலம் முகாமின் நிலை குறித்தும், எதிரியின் பலத்தையும், பலவீனத்தைப் பற்றியும் அறிந்து கொண்டோம்.

### முப்பது நிமிடங்களில் முகாம் நிர்மூலம்

தகுந்த உபாயங்கள் வகுக்கப்பட்டன புதிய உத்திகளை

நாம் தாக்குதல் நடத்திய சமயம் நிலவுகாலம். எதிரிக்குச் சந்தர்ப்பம் வழங்காமல் எதிரியை நிலைகுலையச் செய்யும் வகையில் மின்னல் வேகத்தில் முகாம் மீது தாக்குதலை ஆரம்பித்தோம். எமது வீரர்கள் துணிச்சலோடு தாக்கினார்கள். நூற்றுக்கு மேற்பட்ட இராணுவத்தினர் முகாமுக்குள் நிலை கொண்டிருந்த தடயங்கள் இருக்கின்றன. இரண்டு கவச வானங்கள் மற்றும் ஒரு புல்டோசர்

சிறிலங்கா இராணுவத்தின் பலமான எதிர்ப்புக் கிடைத்தது. எதிர்ப்புக்கு மத்தியிலும் எம்மவர்கள் அஞ்சாமையுடன் முன்நோக்கிச் சென்றார்கள் இவர்களில் சிலர் காயப்பட்டதுடன், வீரச்சாவடையவும் நேரிட்டது. உதவி அணி முன்னேறி தெற்குப்பக்கத்தைப் கைப்பற்றியது முகாமின்வடக்குப் பகுதியும், தெற்குப் பகுதியும் கைப்பற்றப்பட்டதுடன் முகாம் முற்று முழுதாக எமது கட்டுப்பாட்டின் கீழ் வந்தது 30 நிமிடங்களில் முகாம் அழிக்கப்பட்டது.

இந்த முகாம் தாக்குதலின் போது எதிர்பார்த்ததை விட எமக்கு இழப்பு மிகக்குறைவாகவே ஏற்பட்டது. மற்ற முகாம்கள் மீது நாம் மேற்கொண்ட மற்றுகை மற்றும் தாக்குதல்போல் அல்லாமல் இத்தாக்குதல் எதிரிகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரதேசத்தில் அமைந்திருந்தது. எல்லைப் பிரதேசமானதால் எதிரிக்கு அனைத்து வசதிகளும் கிடைக்கக்கூடிய இடம் எமக்கு மருத்துவ மற்றும் வசதிகள் குறைவான இடம். எமது தரப்பில் சிறிய தவறும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தலாம். எமது வீரர் எதையும் சமாளிக்கக்கூடிய மனோநிலையில் இருந்தார்கள்.


ஐந்து வாகனங்களில் இராணுவ உதவி அணியொன்று தமது சகபாடிகளின் உதவிக்கு வந்தது. இந்தஇரு முகாம்களும் வெகு தூரத்தில் இல்லை. உடன் உதவிக்கு வரக்கூடிய தூரம் வாகன அணியில் வந்த ஒரு பவள் கண்ணிவெடியில் சிக்கி நாசமாகியது. ஒருகனரக வாகனம் ஆர்.பி.ஜி தாக்குதலுக்கு உள்ளாகியது. அதிரடித் தாக்குதலினால் நிலை குலைந்த இராணுவ வாகன அணியினால் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. உதவிக்கு வந்த இராணுவ அணி அந்த இடத்திலேயே முடங்கிவிட்டது. இராணுவ அணியினரால் வண்ணான்குள இராணுவ முகாமைக்காப்பாற்ற முடியாத நிலை! எமது கட் அவுட் [Cut out] அணி தான் உதவிக்குவந்த

வண்ணான்குள இராணுவ முகாம்தாக்குதலுக்குச்சென்ற போது வழியில்ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்களைப் பற்றிக் கூறும்போது -

மக்கள் நடமாட்டமில்லாத காட்டுவழி. இராணுவ முகாமை நோக்கிக் கால்நடையாக இரண்டுநாள் பயணம். வழியில் ஒய்வெடுத்து எமது

பேட்டி கண்டவர்
**மதன்**

நீண்ட பயணத்தை இராப்பகலாகத் தொடர்ந்தோம். பயங்கரமான காட்டு மிருகங்கள் குறுக்கிடச்செய்தன யானைக் கூட்டம் ஒன்று குறுக்கே வந்தது. சத்தம் சந்தடியில்லாமல் யானைக்கூட்டத்தைக்கலைக்க



அதிபர் ஆகியோர் கூறும் குற்றச்சாட்டுக்கள் யாவும்உண்மையாகஇருப்பினும், இவர்கள் நடத்திய போராட்டங்கள், நடத்தவுள்ள போராட்டங்கள் எந்தளவிற்கு பிரேமதாசா அரசாங்கத்தைப்பாதிக்கும், அல்லது பிரேமதாசா அரசாங்கம் எந்தளவிற்கு எதிர்க்கட்சிகளின் போராட்டத்திற்குச் செவிசாய்க்கும், எந்தளவிற்கு பிரேமதாசா அரசாங்கம் இவர்களின் போராட்டத்திற்குச் செவிசாய்க்க வேண்டும் என்பவை சர்ச்சைக்குரியதே.

ஏனெனில், எதிர்க்கட்சிகள் இதுவரை அரசாங்கத்திற்கு எதிரான பெரும் மக்கள் போராட்டத்தின் ஊடாக தமது எதிர்ப்பை வெளிக்காட்ட முடியவில்லை. அதாவது மக்களை அணிதிரட்ட அவர்களால் முடியவில்லை. ஒலி எழுப்புதலும் பாதயாத்திரையும், வாகன அணி ஊர்வலமும், கையெழுத்து வேட்டையும், ஒருமக்கள் சக்தியை வெளிப்படையாகக் காட்டப் போதுமானதாக இல்லை. அதாவது ஆயிரக்கணக்கில் சேரும்; மக்கள் கூட்டத்தைக் கண்டு அவற்றை அரசாங்கம் அஞ்சிவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுவும், அரச பணத்தை கோடிக்கணக்கில் செலவீடு செய்தாயினும், மேதினத்திலும், கம்முதாவக் கொண்டாட்டங்களிலும், கேளிக்கையிலும் லட்சக்கணக்கில் மக்களைத் திரட்டி மயங்க வைத்துள்ள பிரேமதாசா அரசாங்கம் இதனைக் கருத்திற்கொள்ளும் என்பதற்குமில்லை. அதற்குத் தேவையும் இல்லை.

இதேவேளை எதிர்க்கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டுகள் நியாயமானவை என உணர்ந்தவர்கள் கூட எதிர்க்கட்சிகளின் போராட்டத்தில் பங்கு கொள்வதாக இல்லை. அதாவது எதிர்கட்சிகளின் மீது, மக்களுக்குப் பெரிய அளவில் நம்பிக்கை இருப்பதாக இல்லை. சிங்கள மக்கள் அவ்வாறு நம்பிக்கையீனம் அடைவதும் நியாயமானதே.

சுமார் பதினைந்து வருடங்களுக்கு மேலாக எதிர்கட்சியாக இருக்கும் இக்கட்சிகள் இதுவரை ஐ.தே.க. ஆட்சியை வீழ்த்தக் கூடிய ஒருவரை தலைவராக ஒருமித்து தெரிவு செய்யமுடியவில்லை. ஐ,தே. கட்சியை எதிர்கின்றார்களே ஒழிய எதிர்க்கட்சிகளுக்குள் உடன்பாடுஇல்லை. எதிர்க்கட்சி ஒருமித்து ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் அளவிற்கு அவர்களுக்குள் ஒருமைப்பாடு இல்லை.

ஆகையினால் மக்கள் எதிர்க்கட்சிகள் மீது நம்பிக்கை கொள்ளவோ, அல்லது ஐ.தே.க. எதிர்க்கட்சிகளைக் கண்டு பயப்படவோ வேண்டிய அவசியம் இருப்பதாகவோ இல்லை. இந்நிலையில், எதிர்க்கட்சிகள் செய்யும், போராட்டங்களும் போராட்டம் செய்தோம் போனோம் என்பதாக இருக்குமே ஒழிய நன்மை ஏதும் பயக்க முடியாது,

காலமாக — காட்டின் அமைப்பிலே தமிழ் ஈழ எல்லைப்புற வேலிகளாக அமைந்துள்ள தமிழ்க் கிராமங்களான கப்பாய்ச்சி, மோத்தான்குளம். நேரியகுளம், வேப்பங்குளம், முசல்குத்தி, ஆனைவிழுந்தான் ஆகியவற்றின் குரல்வளையை நசுக்குவதுபோல அமைந்திருந்தது வண்ணான்குளம் இராணுவ முகாம். கெடுபிடியும், நாசகரமான இராணுவ நடவடிக்கைகளினாலும் இந்தக் கிராமங்களிலிருந்து தமிழ்

தகுந்த உபாயங்கள் வகுக்கப்பட்டன புதிய உத்திகளை கையாண்டு தாக்குதலைநடத்தினோம். 11ம்திகதி அதிகாலை 3-15 மணிக்கெல்லாம் முகாமினுள் நுழைந்து விட்டோம் முதலில் முகாமை முற்றுகையிட்டு வடக்குப்பகுதியால் முன்னேறிய எமது அணியினர் அரண்களைக் கைப்பற்றி முகாமுக்குள் நுழைந்தனர். தெற்குப்பகுதியால் முன்னேறிய எமது அணிக்குச்

ருந்த தடயங்கள் இருக்கின்றன. இரண்டு கவச வாகனங்கள் மற்றும் ஒரு புள்டோசர் எம்மால் சம்பூரணமாக நாசமாக்கப்பட்டது. எமது உக்கிரமான தாக்குதலில் இந்த வாகனங்கள் இயக்கமற்றுப் போனதால் நாம் அவற்றை முற்றாக அழித்துவிட்டோம்.

இந்தத் தாக்குதலைப் பொறுத்த வரையில் மாங்குளம், கொக்காவில் முகாம் தாக்குதல்களில் பாவித்தது போன்ற கனரக ஆயுதங்களை நாம் பாவிக்கவில்லை. சாதாரணமான ஆயுதங்கள் தான் பாவிக்கப்பட்டன. இந்த முகாம் மீது தாக்குதல் மேற்கொள்வதற்கு எம்மால் வகுக்கப்பட்ட தந்திரோபாயத்துக்குக் கனரக ஆயுதங்கள் உபயோகிக்க வேண்டிய அவசியமில்லை. அப்படிப் பாவிக்க வேண்டிய யுத்த முனைகள் வித்தியாசமானவை.

### உதவி முறியடிப்பு

வண்ணான்குள முகாமிற்குத் தந்திரிமலை இராணுவ முகாமிலிருந்து உதவி வரும் என்பதை அனுமானித்து அதனை எதிர்கொள்ளத் தந்திரங்களையும், உபாயங்களையும் நாம் முன்கூட்டியே வகுத்திருந்தோம்.

சிங்களப் பகுதியில் சிங்களக் கிராமத்தை மையமாகக் கொண்டு அமைந்திருந்த முகாகம் தந்திரிமலை. தமிழீழ எல்லைக்கு அப்பால் அமைந்திருந்த இக்குக் கிராமத்தில் இராணுவ முகாமுடன் சேர்ந்தாற் போல் பௌத்த விகாரை, பொலிஸ் நிலையம், பள்ளிக்கூடங்கள் ஆகியன உள்ளன. என்னென்ன சக்திகள் உண்டோ, அவ்வளவையும் ஏலியாக்கி அந்த எல்லைப்புறத்தின் சங்கிலித் தொடர் போன்ற பாதுகாப்புப் பிணைப்பிற்கு உறுதியளிப்பது தந்திரிமலை முகாம் என்று சிங்களவரால் நம்பப்பட்டது.

நாம் எதிர்பார்த்தது போல் தந்திரிமலையிலிருந்து நாற்பத்தைந்து நிமிடங்கள் கழித்து

**வண்ணான்குள இராணுவ முகாம் தகர்ப்பில் வீரச்சாவடைந்தோர் விபரம்:**

- ★ கப்டன் தெய்வம் ( நடராஜா இராமனூர் புளியங்குளம், வவுனியா)
- ★ கப்டன் மணிமாறன் (செல்வன்) நடராசா சிவகரன் தண்ணீரூற்று முள்ளியவளை, முல்லைத்தீவு)
- ★ 2ஆம் லெப்டினன்ட் இளங்கோ (இராமசாமி ரஞ்சித் நிரஞ்சன் ராஜன் மன்னார்)
- 2ஆம் லெப்டினன்ட் ஜெயரூபன் (நாயகன்) (சின்னத்தம்பி வசந்தகுமார் இல. 795, கட்சன் றோட் வட்டக்கச்சி, கிளிநொச்சி)
- ★ 2ஆம் லெப்டினன்ட் சுவேந்திரன் (பாபு) (கிருஸ்ணமூர்த்தி கலாகரன் புளியங்கூடல் ஊர்காவற்றுறை)
- ★ வீரவேங்கை பகிரதன் (ஆறுமுகம் நடராசா இல.2 தொப்பிக்கட்டையடி, இராமநாதபுரம், கல்மடு கிளிநொச்சி)
- ★ வீரவேங்கை கானகன் (டக்கி) சுப்பிரமணியம் சிவகுமார் இல. 28 சிவபுரம், வவுனிக்குளம்



முகாம் தகர்ப்பில் கைப்பற்றிய ஆயுதங்களின் ஒரு தொகுதி

சிறிலங்கா அணிமீது வெற்றிகரமாகத் தாக்குதலை நடத்தி அதனை நிலைகுலைய வைத்தது.

ஒட்டுமொத்தமாக வண்ணான்குளச் சண்டையில் எம்மவர்களில் ஏழுபேர் வீரச்சாவைத்தழுவிக்கொண்டனர். இவர்களின் தியாகமும் எமது வெற்றிக்குக்காரணமாய் அமைந்தது.

வேண்டியிருந்தது. வெடி தீர்த்துக் கலைத்தால் எதிரி விழிப்படைந்து விடுவான். யானைக் கூட்டத்தில் இருந்த இருபத்தைந்து யானைகளுக்கும் அருகில் சென்று தந்திரமாக நம்மவர் ஒருவர் கலைத்தார் என்றால் வழியில் ஏற்படும் கஷ்டங்களை யோசித்துப் பாருங்கள் என்று பேட்டியை முடித்தார்.

# காஸாபகுதி குடியேற்றம் புதிய அரசால் நிறுத்தம்

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள காஸா பகுதியின் மேற்குப் பகுதியில் புதிய குடியிருப்புகளைக் கட்டுவதற்கு புதிய ஒப்பந்தங்களைத் தடைசெய்யும் ஆணையை இஸ்ரேலின் புதிய அரசு பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் நடந்த தேர்தலில் மத்திய கிழக்கு அமைதி ஒப்பந்தத்தின் பகுதியாக புதிய குடியிருப்புக்கள் விரிவு படுத்தப் படுவதைத் தடுப்போம் எனக்கூறிய தொழிற் கட்சி வெற்றிபெற்றது.

மேலும் பரிசீலித்த பிறகு புதிய குடியிருப்புக் கொள்கைகள் முடிவாக்கப்படும் என அரசு தரப்பில் கூறப்படுகிறது குறைந்த 3.000 ஒப்பந்தங்கள் இந்தத் தடையால் பாதிக்கப்படும் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ்பேக்கர் அவர்கள் வரும் ஞாயிறன்று இஸ்ரேல் செல்கின்றார்.

புதிய குடியிருப்புகளை எதிர்த்து அதன் காரணமாக இதுவரை அமெரிக்கா நிறுத்திவைத்திருந்த கடன் உறுதிமொழிபற்றி அவர் இஸ்ரேலிய அமைச்சர்களுடன் பேச்சு நடத்துவார்.

சகல கட்டுமானப் பணிகளும் நிறுத்தப்படாவிடில் தான் அமைதிப் பேச்சுக்களில் இருந்து விலகிக்கொள்ளப் போவதாக பாலஸ்தீனம் தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவில் பத்திரிகை சுதந்திரம் பேணப்படும்

**– பொரிஸ் யெல்சின்**

(மொஸ்கோ)

இஸ்வெஸ்தியா பத்திரிகையை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதற்கு ஆதரவாக ரஷ்யப் பாராளுமன்றம் வாக்களித்துள்ள அதேவேளையில், பத்திரிகையின் சுதந்திரத்தை பாதுகாக்கப் போவதாக ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்சின் கூறியுள்ளார்.

தொழிற்சங்க சார்பில் வெளியிடப்படும் இஸ்வெஸ்தியா பத்திரிகை முப்பத்தெட்டு லட்சம் பிரதிகள் விற்பனையாகி வருவது குறிப்பிடத்தக்கது,

ஈழநாதம்

# இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக தமிழ்நாட்டில் இன்று பேரணி

(சென்னை)

ஈழத் தமிழர்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ள இராணுவ வன்முறைகளைக் கண்டித்து தமிழகத்தில் இன்று மாபெரும் எதிர்ப்புப் பேரணி யொன்று நடத்தப்படவுள்ளது.

தமிழ் நாடு பாட்டாளி மக்கள் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஆர்ப்பாட்ட பேரணி சென்னையிலுள்ள சிறிலங்கா தூதரகத்திற்கு முன்னால் முடிவடையும்.

யாழ் குடாநாட்டின் மீதும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகள் மீதும் சிறிலங்கா அரசு மேற் கொண்டுவரும் பாரிய இராணுவ நடவடிக்கைகளைக் கண்டித்தும், ஈழத்தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை கைவிட்டு அரசியற் தீர்வுக்கு உடன்படுமாறு சிறிலங்கா அரசை வற்புறுத்தியும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறுகிறது.

## திருநாவுக்கரசு விடுதலையை எதிர்த்து தமிழக அரசு மனு

(சென்னை)

பொலிசாரால் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சரும், எம். ஜி. ஆர். அண்ணா தி. மு. க. தலைவருமான எஸ். திருநாவுக்கரசு நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசு மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளது.

அவரை விடுதலை செய்திருந்த முதன்மை சென்றல் நீதிபதி, 1947ம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டம் ரத்துச் செய்யப்பட்டு 1988-ம்ஆண்டில் வேறொரு சட்டம் இயற்றப் பட்டுவிட்டதால், முன்னைய சட்டத்தின் கீழ் திருநாவுக்கரசு கைது செய்யப்பட்டது பொருந்தாது என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் முதல் தகவல் அறிக்கையிலேயே தண்டனைக்குரிய குற்றங்கள் குறிப்பிடப் பட்டு இருந்தமையால் தவறானசட்டவிதியைமேற்கோள் காட்டியதை ஒரு சாட்டாக வைத்து விடுதலை செய்ய முடியாது என்று தமிழக அரசு தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

## இந்தியா போயிங் விமானம் வாங்க அமெரிக்கா உதவி

(வாஷிங்டன்)

அமெரிக்க ஏற்றுமதி இறக்குமதி வங்கியும் எயர் இந்தியா நிறுவனமும் நான்கு நவீன 747 - 400 ரக போயிங் விமானங்களையும், உதிரிப் பாகங்களையும் வாங்க அறுபத்தொன்பது கோடியே இருபது லட்சம் டொலர் நிதி உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இது குறித்த தகவலை இவ் வங்கியின் தலைவர் ஜோன் மெக்கோம்பர் தெரிவித்தார். இந்தியாவிற்கு அளிக்கும் மிகப் பெரிய கடன் இது வென்றும், இந்தியாவின் வர்த்தக சூழ்

மேலும் பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுத்துச் செல்லும் இந்தியாவின் அச்சியல் உறுதி அந்நாட்டிற்கு உதவும் முடிவுக்கு வழி செய்தது என்றும் குறிப்பிட்டார்.

# இந்தியாவின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் தலையிடுகிறது

## இந்திய வெளிவிவகார அமைச்சு கண்டனம்

(டில்லி)

அயோத்தி நகரில் இந்துக் கோயில் ஒன்றைக் கட்டுவது சம்பந்தமாக இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே எழுந்துள்ள தகராறு பற்றிப் பாகிஸ்தான் அரசாங்கம் விடுத்த அறிக்கை இந்தியாவின் உள்விவகாரங்களில் தலையிடுவதாகக் கூறி இந்தியா அந்த அறிக்கையை நிராகரித்துள்ளது.

கடந்த புதன்கிழமையன்று இஸ்லாமாபாத் விடுத்த அறிக்கையில் தீவிரவாத இந்துக்கள் புராதனப் பள்ளிவாசலை இடிப்பதை உடனடியாகத் தடைசெய்யுமாறு புதுடில்லியைக் கேட்டுக்கொண்டதை முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் வெளிநாட்டு அமைச்சு விடுத்த அறிக்கையில் இந்தியாவின் வடமாநிலமான உத்தரப் பிரதேசத்தில் அயோத்தி நகரிலுள்ள பள்ளிவாசல் முஸ்லிம்களின் பூர்வீக சொத்தாகும். இப்பள்ளிவாசலைப் பாதுகாப்பதற்கு வெளிநாட்டமைச்சு இஸ்லாமிய மாநாட்டு ஸ்தாபனத்துடன் தொடர்பு கொண்டுள்ளதென தெரிவித்திருந்தது.

பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் இராமர் பிறந்தார் என நம்பும் இந்துக்கள் இராமர் கோயிலைக் கட்டும்வேலையில் தொடர்ந்து ஆயிரக்கணக்கான இந்துக்கள் ஈடுபட்டுவருகின்றனர்.

## அயோத்தி விவகாரத்தை அரசுநன்கு உணர்ந்துள்ளது

### - நரசிம்மராவ்

(டில்லி)

இந்திய மத்திய அரசு அயோத்தியா விவகாரத்தில் தனது பொறுப்பையும், ...

எவரும் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

## போட்டி

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெறும் வலைப்பந்து போட்டியின் அரையிறுதிப் போட்டிகள் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் போட்டிகளில் 17 வயதுக்கு உட்பட்ட பிரிவில் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து வட இந்து மகளிர கல்லூரியும், மெதடிஸ்த கல்லூரியை எதிர்த்து. உடுவில் மகளிர் கல்லூரியும் விளையாடவுள்ளன 19 வயதுக்கு உட்பட்ட பிரிவில் உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து கன்னியர் மடம் தமிழ் மகா விதியாலயமும், சுண்டிக்குளி மகளிர் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் விளையாடவுள்ளன.

### பரிசளிப்பு விழா

மேஜர் முரளி ஞாபகார்த்தமாக விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவகப் பிரிவினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று (திங்கட்கிழமை) பிற்பகல் 3.30 மணிக்கு சுண்டிக்குளி சென்ஜோன்ஸ் அக்கடமியில் நடைபெறும். (22)

### பேசாலை

...மீறிக் குடியேறியிருப்பதனாலும் தம்மால் அங்கு சென்று குடியமர முடியாது என மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மன்னார் தீவிலுள்ள அகதி முகாமொன்றில் இருந்த தமிழர்கள் மீது தேச விரோதிகள் கும்பலொன்று தாக்குதல் நடாத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### அரசிற்கு

...யிலான அரசாங்க குழுவினருடன் இக் கடன் பற்றிய பேச்சுவார்த்தையில் அவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின்றார்கள்.

# நேருக்கு நேர் மோதுவதை மத்திய அரசு கைவிடவேண்டும்

### - ஜோசி

(டில்லி)

அயோத்தியாவில் அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் கட்டுமாணப் பணி தொடர்ந்து நடைபெறுகிறது.

கட்டுமாணப் பணிகளை நிறுத்துவது பற்றிய பேச்சுவார்த்தை தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது

அயோத்தியப் பிரச்சினையில் நேருக்கு நேர் மோதும் போக்கை மத்தியஅரசு கடைப்பிடிக்கக் கூடாது என்று பாரதீய ஜனதாக் கட்சி தலைவர் முரளி மனோகர் ஜோசி கூறியிருக்கிறார். அயோத்தியில் பிரச்சினையில் நீதி மன்ற உத்தரவு செயற்படுத்தப் படும் என்றுதேசிய ஒருமைப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் அறிவித்த போதிலும், அயோத்தியாவில் ராமர் கோயில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்ட இடத்தில் விஸ்வ ஹிந்து பரிஷத் கட்டுமாணப்பணியைந்தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

அயோத்தியாவில் நடைபெற்று வரும் கட்டுமாணப் பணிகள் பற்றித் தற்போது அயோத்தியா வந்திருக்கும் பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் கருத்துத் தெரிவிக்கையில், இராமர் ஆலயம் கட்டப் படுவதற்குத்தான் உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சி அரசுக்கு மக்கள் தேர்தலில் வாக்களித்தார்கள். உத்தரப் பிரதேச முதலமைச்சர் கல்யாண்சிங் தனது அரசியல் சாஸனக்கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றி வருவதுடன் மக்களின் விருப்பங்களையும் நிறைவேற்றி வருகிறார் என்று கூறினார்.

## அண்ணாமலை நகர்சம்பவம் 5 தமிழக பொலிசார் கைது

(சென்னை)

தென்னாற்காடு மாவட்டம் அண்ணாமலை நகர் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒருவர் கொல்லப்பட்டது அவரது மனைவி பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டது தொடர்பாக இரண்டு சப் இன்ஸ் பெக்டர்கள் உட்பட ஐந்து தமிழ்நாட்டு பொலிசார் கைது செய்யப்பட்டனர்

இதில் சம்பந்தப்பட்ட பொலிசாரை கைது செய்ய வேண்டும் என தமிழ்நாட்டின் பல எதிர்க்கட்சிகளும் பொது அமைப்புகளும் போராட்டம் நடாத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

### பிரேமதாசா அரசாங்கத்திற்கு எதிரான

## வாகன அணி ஊர்வலம் நேற்று ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கும், அவரின் கொள்கைகளுக்கும் எதிராக வாகன அணி ஊர்வலம் தொடங்கியுள்ளது.

சுமார் 500 மோட்டார் வாகனங்கள் அடங்கிய இந்த ஊர்வலம் அடுத்த நான்கு நாள்களில் வடமத்திய மாகாணம் ஊடாகச் செல்லும். நாட்டின் மிகச் சாதாரண மக்களுக்கும் தமது கருத்தை விளக்குவது இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் என எதிர்க் கட்சி அரசியல் வாதிகள் தரப்புச் செய்திகள் கூறுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன இந்தப் பதினைந்து ஆண்டுகளில் நாட்டின் வட பகுதியிலும், கிழக்கு மாகாணத்திலும் இனப் போர் நடந்து கொண்டிருக்கிறது. தெற்கிலும் பல முறை உள்நாட்டுப்போர் நடந்தது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

அனுராபண்டார நாயக்கா இந்தச் செய்தியை வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு எடுத்துக்கூற எண்ணியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## சீருடைகள் வழங்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் ஊழியர்களுக்கு நேற்று முன்தினம் சீருடைகள் விநியோகம் செய்யப்பட்டது.

கடந்த வாரம் குமண கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட சீருடைகளே விநியோகிக்கப்பட்டது. ஏற்கனவே 90 ஆம் ஆண்டிற்கான சீருடைகள் தாதிமார்களுக்கு வழங்கப்பட்டு சிற்றூழியர்களுக்கு வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (பர)

## 15,000 ஆசிரியர்கள் விரைவில் நியமனம்

(கொழும்பு)

வெகுவிரைவில் நாடு முழுவதிலும் பதினையாயிரம் ஆசிரியர்கள் புதிதாக நியமனம் வழங்கப்பட இருப்பதாகவும், மட்டக்களப்பு, வவுனியா நகரங்களில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி அமைக்கப்படும் என்றும் சிறிலங்கா ஜனாதிபதி கண்டியில் நடைபெற்றவைபவமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் யுத்தத்திற்காக பெருமளவு நிதி செலவிடப்படுகின்ற போதிலும் வறுமை ஒழிப்புக்கு முக்கிய கவனம் கொடுத்து செயற்திட்டங்களை அமுலாக்கி வருவது தமது அரசாங்கத்தின் மகத்தான சாதனை என்றும் குறிப்பிட்டார்.

## வழங்கப்படும் பொருள்கள் விநியோகிக்கப் போதாது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் புனர்வாழ்வுத்திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சவர்க்காரம், சீனி மற்றும் பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குடும்ப எண்ணிக்கைக்கு ஏற்ற முறையில்வழங்கப்படவில்லை எனத் தெரி...

...முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### அதிபர்கள்

...இருந்து 150 ரூபாவாகவும் அதிபர்களுக்கான அலவன்ஸ் அதிகரிக்கப்பட உள்ளதாக அறியப்படுகின்றது.

வங்கியின் தலைவர் ஜோன் மெக்கோம்பர் தெரிவித்தார். இந்தியாவிற்கு அளிக்கும் மிகப் பெரிய கடன் இது வென்றும்,

இந்தியாவின் வர்த்தக சூழ் நிலையில் நல்ல அபிவிருத்தி யையும் அமெரிக்காவுடன் பெரிய அளவு வர்த்தக சந்தர்ப் பத்தையும் என்னால் காண முடிகிறது என்றும் தெரிவித் தார்.

## பாப்பரசர் உடல் தேறுகிறார்

(ரோம்)

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் வானொலி மூலம் பிரார்த் தனை நடத்துவார் என்று தெரிய வருகின்றது.

அண்மையில் நடத்தப்பட்ட சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அவரது உடல்நிலை தற்போது நன்கு தேறி வருவதாகவும், தனது அறையில் அவர்எழுந்து நடமாடுவதாகவும் மருத்துவ வட்டாரங்கள் கூறியுள்ளன.

## -நரசிம்மராவ்

(டில்லி)

இந்திய மத்திய அரசு அயோத்தியா விவகாரத்தில் தனது பொறுப்பையும், கடமையையும் நன்கு உணர்ந் திருப்பதாகவும், பொருத்த மான நேரத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுடில்லியில் தேசிய ஒருமைப்பாட்டு சபையின் கூட்டத்தைமுடித்து பேசியஅவர்மேலும்கூறுகையில் பதற்றத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவொரு செயலிலும் எவரும் ஈடுபடக்கூடாது என்று கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் பேசிய பாரதீய ஜனதாக்கட்சிப் பிரதி நிதி தேசிய ஒருமைப்பாட்டு சபைக் கூட்டம் குறிபிட்ட ஒரு கட்சியை தாக்குவதற் கான ஒரு களமாகப் பயன் படுத்தப்படுவதாக குற்றம் சாட்டினார்.

இக் கூட்டம் அயோத்தியா விவகாரத்தில் எந்த முடிவை யும் எட்டாமலேயே ஒத்தி வைக்கப்பட்டது குறிப் பிடத்தக்கது.

ஜனநாயகக்கட்சிசார்பில்

## ஜனாதிபதி வேட்பாளராக பில்கிளிங்டன் தெரிவு

(நியூயோர்க்)

அமெரிக்க ஜனநாயகக் கட்சி ஆர்கின் ஸார்ஸ் ஆளுநர் பில் கிளிங்டன் என்பவரை தனது ஜனாதிபதி வேட்பாளராக பூர்வாங்கமாக நியமனம் செய்துள்ளது.

இதேவேளை ஏபிசி 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை நடத்திய அபிப்பிராய வாக் கெடுப்பில் கிளிங்டனுக்கு 45 சதவீதமும் ஜோர்ஜ் புஷ்சிற்கு 28 சதவீதமும் வாக்குகள் கிடைத்துள்ளன.

'நியூயோர்க் டெயிலிநியூஸ்' பத்திரிகை நடத்திய அபிப்பி ராய வாக்கெடுப்பில் கிளிங் டனுக்கு 40.4 சதவீதமும் புஸ் சிற்கு 31.2 சதவீதமும் வாக் குகள் கிடைத்துள்ளது.

கிளிங்டனுக்கு தற்பொழுது 45 வயதாகிறது அவரது உதவி ஜனாதிபதி வேட்பாளர் அல் கோர் (வயது 44) என்பவர் டென்னஸி ஆளுநராவார்.

அமெரிக்காவின் மிகப்பெரிய தொழிற்சங்கமான 'டீம்ஸ்டர்ஸ்' கிளிங்டனுக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.


## "நெருப்பு மழை"

இந்த மண்ணின்
போராட்டப் பாதையில்
எமது மக்கள் .....
நெருப்பு மழையில்
குளித்துக்கொண்டிருக்கும்
இவ்வேளையில் .. .....

வெளிவருகிறது . . . .

கவிஞர் வாஞ்சிநாதனின்

## "நெருப்பு மழை"

நாளை பி.ப. 4.00 மணிக்கு

**யாழ். இந்துக்கல்லூரி**

குமாரசாமி மண்டபத்தில் - இதன்
வெளியீட்டு விழா வைபவம் நடைபெறவிருக்கிறது.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.** (சி-4726)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.


### அழுத்த

த்தில் நடைபெற்ற அமைச்ச ரவை வாராந்த பத்திரிகை யாளர் மாநாட்டில் கேணல் முனசிங்க தெரிவித்தார்.

யிலான அரசாங்க குழுவின ருடன் இக் கடன் பற்றிய பேச்சுவார்த்தையில் அவர்கள் தற்போது ஈடுபட்டு வருகின் றார்கள்.

அரச வங்கிகளை திறமை யாக நடத்த வேண்டுமென் றும் இவை திருப்திகரமாக எதுவித அரசியல் தலையீடுக ளுமற்ற வகையில் இயங்க வேண்டும் என்றும் உலக வங்கி கொழும்பிடம் எதிர் பார்க்கின்றது.

மேலும் கூட்டுத் தாபனங் கள் இலாபகரமானவையாக இயங்க வேண்டுமென்றும் ரூபாய் மதிப்பு குறைக்கப்பட வேண்டுமென்றும் அது எதிர்பார்ப்பதாகத் தெரிய வருகிறது.

### யாருடனும்

ஆனால்அவற்றைநாம் தாண்டி வெற்றி அடைந்தோம்.

ஐ.தே.க.தோல்வியைத் தழு வுவதனால் 1988 ஜனாதிபதி தேர்தலில் அது நடந்திருக்க வேண்டும், ஆனால், அத்தேர் தலிலேயே வெற்றிபெற்றோம் ஜனாதிபதி பதவிக்கு இன்று ஆசைப்படுவோர் நாட்டை பயங்கரவாதம் ஆட்டிப் படைத்த போது நாட்டைக் காக்க முன்வரவில்லை. இன்று பாதயாத்திரை போவோர் அன்று அப்படிச்செய்யவில்லை என்றும் அவர் தனது உரை யில் குறிப்பிட்டார்.

### கையெழுத்து

கோரிக்கை விடுப்போம்.

அரசியல் குற்றவியல் பிரே ரணையில் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள்குறித்துஅரசாங்கம் விசாரணை செய்ய வேண்டும் இல்லையேல் ஜனாதிபதி ராஜி னாமாச் செய்ய வேண்டும்.

எமது இந்த கையெழுத்து வேட்டை நடவடிக்கைக்கு ஏனைய அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் பெறப்படும்.

நாடளாவியரீதியில் கையெ ழுத்து பெறப்படும். கண்டலம ஹோட்டல் பிரச்சினை தொடர்பாக அப்பகுதி மக்க ளின் கருத்தை அறிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தா ர்கள்.

சீனி மற்றும் பொருள்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்குக் குடும்ப எண்ணிக் கைக்கு ஏற்ற முறையில்வழங் கப்படவில்லை எனத் தெரி விக்கப் படுகிறது. மேற்படி பொருள்களைப் பெறும் ப:நோ.கூ. சங்கங்கள் அவ ற்றை விநியோகம் செய்ய முடியாத நிலையில்உள்ளதாக ப.நோ.கூ சங்கங்கள் தரப்பில் சொல்லப்படுகிறது.

இதனால் குடும்ப அட்டை அடிப்படையில் பங்கீடு செய்ய

### வாஞ்சி

கையன் காரைசுந்தரம் பிள்ளை ஆகியோர் நிகழ்த்த சிற்பி,புதுவை இரத்தினதுரை ஆகியோர் சிறப்புரைகள் ஆற்றவிருக்கின்றார்கள். பதி லுரையை மு.வே.யோ.வாஞ்சி நாதன் வழங்குவார்.

சின்னமணி குழுவினரின் போர் முனையில் நெருப்பு மழை என்ற வில்லிசை நிகழ்ச் சியும் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது

### செங்கண்மாரி

பத்து ஏற்படலாம் என்றும் அவர் கூறினார்.

உலகெங்கிலும் வருடம் தோறும் ஐந்து கோடி மக்கள் இந்நோயினால் பீடிக்கப்படு கின்றார்கள். இவர்களில் 20 இலட்சம் பேர் மடிகிறார்கள்.

இந்நோய் முதல் முதலாக இலங்கையில் 1940 இல் கண்டு பிடிக்கப்பட்டது. கொழும்பு வைத்திய பீடத்தில் சென்ற வருடத்தில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வு ஒன்றின் முடிவு களைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற வருபவர்களில் பதினை ந்து சதவீதமானோர் இந்நோ யினால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர்களில் பெரும்பாலா னோர் ஆஸ்பத்திரிகளில் போதியளவு தொற்று நோய்க் கட்டுப்பாடுகள் இல்லாததன் விளைவாகவே இந்நோயினால் பாதிக்கப்படுகின்றனர் என வும் அவர் கூறினார்.

### அதிபர்கள்

இருந்து 150 ரூபாவாகவும் அதிபர்களுக்கான அலவன்ஸ் அதிகரிக்கப்பட உள்ளதாக அறியப்படுகின்றது.

### க. பொ. த.

றைப் பரீட்சார்த்திகள் தமது ஆள் அடையாளத்தை நிரூ பிப்பதற்காகப் பயன்படுத்த லாம்.

ஒருவர் தமது புகைப்படப் பிரதியில் கையொப்பமிட்டு அத்தாட்சிப்படுத்திச் சமர்ப் பித்தால் அவை பரீட்சைத் திணைக்களத்திற்குச் சமர்ப் பிக்கப்படல்வேண்டும். புகைப் படப் பிரதியிலுள்ள கையொப் பமும், பரீட்சைத் திணைக் களத்திலுள்ள விண்ணப்பப்படி வத்திலுள்ள கையொப்பமும் நன்கு பரிசீலிக்கப்பட்டதன் பின்பே பரீட்சைப் பெறுபேறு கள் வழங்கப்படும். ஆகை யால் முன் கூறப்பட்ட தகுதி யான அடையாளங்களைச் சமர்ப்பிக்குமாறு பரீட்சைத் திணைக்களம் பரீட்சார்த்தி களைக் கேட்டுள்ளது.

செயற்திட்டங்களை அமுலாக்கி வருவது தமது அர சாங்கத்தின் மகத்தான சாதனை என்றும் குறிப்பிட் டார்.

### அமைப்பாளராக

போதும்சிரேஷ்ட தலைவர்கள் சிலர் எதிர்ப்பதாக தெரிவித் தார். அதுடன் கட்சியில் சேருவதை சிலர் எதிர்ப்பது ஒன்றும் ரகசியமான விடய மல்ல என்றும் கூறினார்.

### அஞ்சல்

பாடசாலை மாணவர்கள் தேசிய அடையாள அட்டை க்கு விண்ணப்பிக்க முடியாத தினாலும் அவை உரிய காலத் தில் வந்து சேர்வதில்லை என் பதினாலும் மாணவர்கள் அஞ் சல் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கவேண்டிய நிலை யில் உள்ளனர்.

இதனால் எதிர்வரும் டிசம் பர் மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். (ச)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**19. 07. 1992**

எமது பதிவிலுள்ள கடைசி இலக்கம்:- 4934

நாம் அனுமதித்த கடைசி இலக்கம்:-4933

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்:-

41-9659, 27-8515, 40-9188, 24-8212, 26-9158, 28-2657, 42-266, 27-7717, 26-6628, 27-9771, 26-2657, 28-2145, 36-4231, 41-5933, 28-1049, 24-2394, 45-9663, 27-5863, 27-8803, 41-7109, 41-5599, 27-7978, 27-2016, 42-0970, 27-5945, 37-1731, 27-8037, 36-7144, 25-8135, 25-3654, 22-8690, 36-5720, 37-1708, 25-346, 25-7635, 36-6008, 25-9532, 36-2867, 70-2259,

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

42-6119, 22-584, 26-1253, 27-8179, 29-2049, 42-7012, 42-1251, 42-1464, 24-1691, 26-6505, 27-6821, 24-8700, 41-0534, 27-8283, 28-6556, 27-2088, 41-5417, 42-849, 42-0488, 42-5760. 25-3948, 36-2937, 36-1094, 22-7011